சிறந்த புளொக் தயாரிப்பாளர்
Quality
BLOCK
MAKERS
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

★
Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 178
National Tamil Daily தேசிய தினசரி
(9-8-65)
விசுவாவசு ஆடி 25 ரபி அகிர் பிறை 11 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க, வைர நகைகளுக்கு
போன் 585 PHONE 585
K. N. M.
மீறன் சாஹிப்
தங்கப்பவுண நகை மாளிகை
கன்னாதிட்டி யாழ்ப்பாணம்.

# "இலங்கையின் ஏகப்பிரதிநிதியாக ஐ. நா. செல்கிறேன்

## தமிழர் பிரச்னை பற்றியும் எடுத்துக் கூறுவேன்"

### யாழ்ப்பாணத்தில் திரு. ஜி. ஜி.

யாழ்ப்பாணம், திங்கள்

"இலங்கையின் ஏகப்பிரதிநிதியாக ஐ. நா.வில் குரல் கொடுப்பதற்கு நான் அங்கு செல்கிறேன். ஒடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனத்தின் பிரச்னைகள் அங்கு விவாதத்துக்கு எடுக்கப்படும்போது தமிழ்பேசும்மக்களின் பிரச்னைகளையும் நான் அங்கு எடுத்துக்கூறுவேன்" என்று யாழ்ப்பாணம் எம். பி.யும் அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் தலைவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

தமிழ்க்காங்கிரஸின் யாழ்ப்பாணம் கொட்டடி வாலிப முன்னணியினர் திரு பொன்னம்பலத்துக்கு அளித்த வரவேற்பு உபசாரக்கூட்டத்திலேயே திரு. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

யாழ்ப்பாணம், கொட்டடி முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற வரவேற்புக்கூட்டம் அகில இலங்கை வாலிப முன்னணித்தலைவரும், வவனியா எம் பி யுமான திரு. சி. சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்றது.

வண்ணை சிவன்கோவிலடியிலிருந்து அலங்கரிக்கப்பட்ட மோட்டார் ரதத்தில் வவனியா, உடுப்பிட்டி எம். பிக்கள் உட்பட திரு. ஜி. ஜி பொன்னம்பலம் மேளதாள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச்செல்லப்பட்டார். கன்னாதிட்டி கஸ்தூரியார் வீதி, கில்னர் வீதி, பிரபங்குளவீதி, சிவன் பண்ணை வீதி வழியாக ஊர்வலம் சென்று கூட்டமைதானத்தை அடைந்தது. பெருமளவு மக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். வழிநெடுகிலும் பலர் எம். பிக்களுக்கு மலர் மாலை சூட்டினர்.

திரு. பொன்னம்பலம் மேலும் குறிப்பிட்டதாவது.

"இலங்கையின் ஏகப்பிரதிநிதியாக குரல் கொடுப்பதற்கு இங்கிருந்து ஐ நா. சபைக்கு நான் செல்லவிருக்கிறேன். ஒடுக்கப்பட்ட ஒரு சிறுபான்மை இனத்தின் பிரச்னைகள் அங்கு விவாதத்துக்கு எடுக்கப்படும்போது, தமிழ்பேசும்மக்களுடைய பிரச்னைகளை அங்கு எடுத்துக்கூறுவேன். ஐ. நா. சபைக்குச் செல்வதை சிங்களசமூகத்தினர் சகலரும் வரவேற்கும் நேரத்தில் எமக்குள்ளேயே யுள்ள ஒருசாரார் கிண்டலும் கேலியும் செய்கின்றனர்."

**உரிமைகளைப்பெற வட்டமேசை**

சமஷ்டிக்கட்சியினரும்காமுய்சேர்ந்திருக்கும் ஐ. தே. கட்சியே தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வட்டமேசைமகாநாடு மூலம்தான் சிறுபான்மையினரின் பிரச்னைகளை தீர்த்துக்கொள்வதெனக் குறிப்பிட்டுள்ளது. ஆட்சி நடத்தும் அவர்களே எமது கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொள்கிறார்கள், அப்படியிருக்க எமக்குள்ளே இருக்கும் சமஷ்டிக்கட்சியினர் வட்டமேசை மகாநாட்டுக்கு மறுப்புச்சொல்கிறார்கள்.

**மாவட்டசபை மர்மம்!**

சமஷ்டிஎன்ற உச்சரிப்பை விட்டு மாவட்டசபை என்ற புதுநாமத்தை இப்பொழுது இங்கு கூறிவருகிறார்கள். மாவட்டசபை ஒரு மர்மம் நிறைந்ததொன்றாகி அதனைப் புரியாத புதிராகி அதனைக் கண்கட்டிவித்



தையென கூறிவருகிறார்கள். மாவட்டசபைகள் எமக்கு அளிக்கப்பட்டால் எமக்கு ஐந்தே ஐந்து மாவட்டசபைகள் தான் உள்ளடங்கும். மற்றைய 21 மாவட்டசபைகளும் சிங்களப்பகுதிகளையேசாரும். ஆக ஐந்துமாவட்டங்களில் தமிழ்நிர்வாகமொழியாகவும் மற்றைய 21 மாவட்டங்களிலும் சிங்களம் நிர்வாகமொழியாகவுமிருக்கும். அப்படியானால் 21 மாவட்டங்களிலும் வசிக்கும் தமிழ்மக்களின் கதியென்ன?

தமிழ்பேசும் மக்களுடைய சகலபிரச்னைகளையும் இந்நாட்டில் பெரும்பான்மையாகவுள்ள நல்லெண்ணம்கொண்ட சிங்கள அரசாங்கமொன்றுடன் கூடி நின்றுதான் பெற்றுக்கொள்ளலாம் என்று பல்லாண்டுகாலமாக நான் சொல்லிவந்த கருத்தை ஏற்று இப்பொழுதாவது அதனைச் சமஷ்டிக்கட்சியினர் செயலில் காட்டியிருப்பது வரவேற்கக் கூடியது. ஆனாலும் சமஷ்டியை ஒருபொழுதும் தரமாட்டோம் என்று உறுதியாகக்கூறும் ஐக்கியதேசியகட்சியினருடன் சேர்ந்துகொண்டு அவர்கள் மூலம் சமஷ்டிப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாமென்று தமிழ்மக்கள்முன் இவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள். அதேவேளையில் சென்ற ஒன்பது ஆண்டுகாலமாக தமது பிரச்னைகளையும், உரிமைகளையும் தராத எந்த அரசாங்கத்துடனும் சேர்ந்துகொள்ள மாட்டோமென்றும், ஐ தே.கட்சியையும் என்னையும் பிணைத்து திட்டிவந்தவர்கள் என்னை வழியாகக்கொண்டு ஐ.தே.கட்சியில் சேர்ந்தபின்பும என்னையும் எனது கட்சியையும் ஏன் திட்டுகிறார்கள் என்பதே புரியாதபுதிராக இருக்கிறது.

(6-ம் பக்கம் பார்க்க)

# வரிப்பளு நீங்குமா?

## இன்று பட்ஜட் தினம்

யாழ்ப்பாணம், திங்கள்

### அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறையுமா?

### முக்கியமான பொருள்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படுமா?

### வாழ்க்கைச் செலவு அதிகரிப்பினால் கஷ்டமுறும் சாதாரண மக்கள் மீது சுமத்தப்பட்ட வரிப்பளு ஓரளவு நீக்கப்பட்டு மக்கள் சந்தோஷமாக வாழ வழிபிறக்குமா?

தேசிய அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட் (வரவு செலவுத்திட்டம்) இன்று பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படும் பொழுது மேற்கண்ட கேள்விகளுக்கு விடைகள் கிடைத்து விடும்.

பார்லிமெண்ட் இன்று பிற்பகல் 2-00-க்கு கூடுகின்றது. வரவு-செலவுத்திட்ட யோசனைகளை நிதிமந்திரி திரு யு பி வன்னிநாயகா பிற்பகல் 4-40க்கு வாசிப்பார்.

இதற்கு முன்னர், இன்று காலை பத்து மணிக்கு மந்திரிகள், மந்திரிசபை அறையில் கூடுவார்கள். அப்பொழுது தமது 'பட்ஜட்' யோசனைகளை மந்திரிகளிடம் எடுத்துக்கூறுவார்.

**நிகழ்ச்சிநிரல்**

இன்று பார்லிமெண்ட் கூடியதும் முதலில்பல்வேறு எம் பிக்கள் முன் அறிவித்தல் கொடுத்திருந்த பதினெட்டுக்கேள்விகளும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும், அதன் பின்னர் உள்நாட்டுமந்திரி திரு டட்லி சேனநாயக்காவின் திருத்த மசோதாவொன்று தாக்கல் செய்யப்படும். அதன் பின்னர் விலைக்கட்டுப்பாட்டுத் திருத்த மசோதா தாக்கலாகும் இவைகளுக்குப் பின்னரே நிதிமந்திரி தமது வரவு-செலவுத்திட்ட யோசனைகளை வெளியிடுவார்.

**ஆறுதல் அளிக்குமா?**

தேசிய அரசாங்கத்தின் முதலாவது பட்ஜட் குறிப்பாக எல்லோருக்கும் ஒரு ஆறுதலை அளிக்கக்கூடியதாகவிருக்கும் என நம்பப்படுகிறது.

**'பொறுத்திருங்கள்'**

நிதிமந்திரி திரு யு பி வன்னிநாயக்காவை பத்திரிகை நிருபர்கள் அவரது வாசஸ்தலத்தில் "பட்ஜட்" பற்றிகேட்டபொழுது "கொஞ்சம் பொறுத்திருங்கள், திங்கட்கிழமை எல்லாம் தெரிந்து விடு"மென்று நிதிமந்திரி தெரிவித்திருந்தார்.

# நிரந்தர "டாக்ஸி" நிலையம் நிறுவப்படும்

### சங்கத்துக்கு எம். பி. உறுதி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணத்தில் புதிய இ. போ. ச. பஸ் நிலையம் அமைக்கப்படும் பொழுது பொது மக்களின் வசதிகளுக்காக பஸ் நிலையத்துக்கு அருகில் நிரந்தரமான டாக்ஸி நிலையமொன்றை நிறுவ தாம் நடவடிக்கை எடுப்பதாக யாழ்ப்பாணம் டாக்ஸி இயக்குனர் கூட்டுறவு சிக்கன சேமிப்புச் சங்கத்தின் தூதுகோஷ்டிக்கு யாழ்ப்பாணம் எம். பி திரு. ஜி ஜி. பொன்னம்பலம் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இச் சங்கத்தின் தூதுகோஷ்டியொன்று நேற்றுக்காலை யாழ்ப்பாணம் எம். பி.யைச் சந்தித்து தங்களின் முக்கிய கோரிக்கைகள் குறித்து மகஜரொன்றைச் சமர்ப்பித்திருந்தது

"யாழ்ப்பாணத்தில் சுமார் 80 டாக்ஸிகள் இருந்தும் நிரந்தரமான டாக்ஸி நிலையம் இல்லை. ஆனால் வருடமொன்றுக்கு ஒரு டாக்ஸியிடமிருந்து யாழ் மாநகரசபை நூறு ரூபாய் வரிப்பணமாக அறவிடுகிறது. கொழும்பில்கூட வருடமொன்றுக்கு பத்து ரூபா மட்டுமே அறவிடுகிறார்கள். இது தவிரயாழ்ப்பாணம் புகையிரத அதிகாரிகள் வருடத்துக்கு 25 ரூபாய் வரி தருமாறு கோருகிறார்கள்" என்று அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"'டாக்ஸி' மீட்டர்கள் இறக்குமதியை அரசாங்கம் தடைசெய்திருப்பதால் நாங்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றோம் இத் தடையை அகற்றி டாக்ஸி மீட்டர்களை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கவேண்டும்" என்றும் டாக்ஸி சங்கத்தினர் கோரியிருந்தனர்.

யாழ்ப்பாணம் எம். பி. தூதுகோஷ்டிக்குப்பதிலளிக்கையில் சங்கத்தினரின் இந்த முக்கிய கோரிக்கைகளைத் தாம் கவனித்து விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி தெரிவித்தார்.

டாக்ஸி சங்கத்தின் தூதுகோஷ்டியில் தலைவர் திரு வி எஸ் எஸ் கே சிவானந்தம், காரியதரிசி திரு. ஏ. பரமசாமி, பொருளாளர் திரு த தம்பித்துரை ஆகியோர் இருந்தனர்.

# "ஜீப்'பில் வந்தவர்கள் பெயர் தெரியாது"

### இராணுவ தாக்குதல் வழக்கில் முன்னாள் சார்ஜன்ட் சாட்சியம்

சாவகச்சேரி, ஞாயிறு

இயக்கச்சி இராணுவத்தாக்குதல் வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. பி. ஜெபேர்ட் சில்வா முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது இராணுவ சார்ஜன்ட் திரு. எம். கே. ஜினதாஸா சாட்சியமளித்தார். அவர் கூறியதாவது:-

"நான் இயக்கச்சி இராணுவ முகாமில் ஒன்றரை மாதங்கள் சார்ஜன்டாகக் கடமையாற்றினேன். அப்போது மேஜர் அத்துக்கோறல்ல அந்த முகாமிற்குப் பொறுப்பதிகாரியாய் இருந்தார். லெப்டினன்ட் குமாரசாமி பதில் பொறுப்பதிகாரி. 5-7-64 அன்று மத்தியானம் நான் முகாமில் இருந்தேன். சாப்பிட்ட பின்னர் முகாமை விட்டு வெளியே போனேன். நான் வாகனத்தில்தான் போனேன். நேரம் நினைவில்லை.

**முதலாம் எதிரியின் உத்தரவின்படி போனேன்**

முதலாம் எதிரி லெப்டினன்ட் குமாரசாமியின் உத்தரவைத் தொடர்ந்து ஜீப்பில் ரோந்துபுரியச் சென்றேன். நான் சென்ற ஜீப்பில் வேறு பலரும் இருந்தனர். அதைச் சாரதி ஒருவர் செலுத்தினார். சாரதிக்கருகில் நான் உட்கார்ந்திருந்தேன். நான் அதில் ஏறியபொழுது மற்றவர்கள் உள்ளேயிருந்தனர். முதலாம் எதிரி உத்தரவு பிறப்பித்துவிட்டு முகாமில் அலுவலகத்திலுள்ளே இருந்தார். ஆனால் பின்னர் அவரைத் தாளையடியில் உள்ள காவல் நிலையத்திற்கு முன்னால், சந்தித்தேன்,

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அண்ணல் வாக்கு**

வரலாற்றுக்கு முந்திய காலத்திலிருந்து செய்து வந்ததுபோல், தங்கள் குடிசைகளில் கைத்தொழில்களை கிராமவாசிகள் மீண்டும் செய்ய வேண்டும். கைத்தொழில்களை மீண்டும் புனருத்தாரணம் செய்வதுதான் வேலை கிடைக்க வழி.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆடி 25 (9-8-65)


## விலை நிர்ணயம் என்ன செய்யும்?

இலங்கையில் உற்பத்திசெய்யப்படும் பாவனைப்பொருள்களின் விலைகள் இவ்வருடம் செப்டம்பர் மாதத்திலிருந்து கணிசமான அளவுக்குக் குறைக்கப்படவிருப்பதாகவும் இலங்கையில் தயாராகும் ஒவ்வொரு பொருட்களினதும் உற்பத்திச் செலவு பற்றி ஆராய்ந்த கைத்தொழில் அமைச்சின் பரிசோதகர்கள் குழுவொன்று இவ்வருடம் செப்டம்பர் மாதத்திலிருந்து இவை ஒவ்வொன்றும் விற்கப்படவேண்டிய விலைகளை நிர்ணயித்துள்ளதென்றும் ஒரு செய்தி கூறுகிறது. இது நல்ல செய்தி. ஆனால் எந்தவகையில் இது நடைமுறையில் பயன்படுமென்பது பரிசீலனைக்குரிய விஷயம்.

உள்ளூர் உற்பத்திப்பொருள்களானாலும் சரி இறக்குமதிப் பொருள்களானாலும் சரி அவைகளுக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டு விலைகளின் பட்டியல் ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் எல்லோர்பார்வைக்கும்படக்கூடிய விதத்தில் தொங்கவிடப்பட வேண்டுமென்பது சட்டம். கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக பொருள்களை விற்பவர் மீது நடவடிக்கை எடுக்கவும் சட்டமிருக்கிறது; விலைப்பட்டியல்களைத் தொங்கவிடத் தவறியவர்கள் சிலர் மீதும் கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்று அதிகலாபம் "அடித்தவர்" சிலர் மீதும் வழக்குத் தொடரப்பட்டும் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுமுள்ளது. என்றாலும் கொள்ளைலாபமும்பதுக்கலும் ஒழிந்துவிடவில்லை. உள்ளூர்ப்பொருள்களின் உற்பத்தித்திறன் குறைவாக இருப்பதுடன் பொருள்களின் இறக்குமதி ஒரு சிலரினதும்அரசாங்கத்தினதும் ஏகபோக உரிமையாக்கப்பட்டதும் பதுக்கலுக்கும் கொள்ளைலாபத்துக்கும் ஒரு காரணமாக இருந்தது. அரசாங்க அதிகாரிகள் சிலரிடம் உள்ள லஞ்சஊழல்பழக்கமும் மற்றொரு காரணமாகும்; உள்ளூர்ப் பொருள்களுக்காயினும் வெளியூர்ப் பொருள்களுக்காயினும் விலை நிர்ணயிக்கப்பட்டதுடன் பதுக்கலோ, கொள்ளை இலாபமோ ஒழிந்துவிடாது. நிர்ணயிக்கப்பட்ட விலையில் பொருள்கள் பொதுமக்களுக்குக் கிடைக்க வழிசெய்வதுடன் அவை அந்த விலையில் விற்பனை செய்யப்படுகிறதாவென்பதையும் கவனித்துக்கொள்ளவேண்டும்.

இதே சமயம் பழுதடையக்கூடிய பொருள்களை காலம் கடந்து வியாபாரிகளுக்கு உற்பத்தியாளர்கள் விநியோகம் செய்யாமலும் அவ்விதபொருள்களுக்கு ஒருவித கழிவு வழங்கப்படவேண்டியதும் அவசியமாகும். இல்லையேல் பழுதடையும் பொருள்களில் ஏற்படும் நஷ்டத்தை இதர பொருள்களின் விலையை அதிகரிப்பதன் மூலம் ஈடுசெய்ய வியாபாரிகள் முனைவர். இது இயல்பு.

உள்ளூர்ப் பொருள்களுக்கு விலைகளை நிர்ணயித்துவிட்டு அதே பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யவும் அனுமதித்தால் உள்ளூர் உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் உள்ளூர் உற்பத்தியாளரும் பாதிக்கப்படுவர். உள்ளூரில் உற்பத்திசெய்யக்கூடிய பொருள்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு கட்டுப்பாடு விதிப்பதுடன் நாட்டுக்குத் தேவையான அளவுக்கு அப்பொருள்களை இங்கு உற்பத்தி செய்யவும் ஊக்கம் அளிக்கப்படவேண்டும். இங்கு உற்பத்திக்கு ஊக்கமளிக்காமல் வெளியிலிருந்து இறக்குமதி செய்வதற்கும் தடைவிதிக்கப்பட்டதுதான் வருடங்களில் இங்கு பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவும் பதுக்கலும் கொள்ளைலாபமும் தலைதூக்கவும் காரணமாக இருந்தது. உள்ளூரில் பொருள்களின் உற்பத்தியைக் கணித்து அதற்கேற்ப இறக்குமதியைக் கட்டுப்படுத்தவேண்டும். அப்பொழுதுதான் பதுக்கலையும் கொள்ளைலாபத்தையும் மட்டுமல்ல விலைக்கட்டுப்பாடு சரியாக செயல்படுகிறதாவென்பதைக் கவனிக்கவேண்டிய அரசாங்க ஊழியர் மத்தியில் லஞ்ச ஊழல் நிலவாமல் தடுக்கவும் முடியும்.

எந்தப் பொருள்களுக்கு அரசாங்கம் விலைகளை நிர்ணயித்தாலும் அவற்றைச் சரியான முறையில் செயல்படுத்தாதவரை பொதுமக்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்போவதில்லை.

## குறிப்பு புத்தகங்கள் மறைந்த மாயம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

இராணுவ சுகாதாரப் பகுதியினரின் சாப்பாட்டு இடத்திலிருந்து டஜன் கணக்கும் புத்தகங்களும் அலுமாரியுடன் மாயமாக மறைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இப் புத்தகங்கள் யாவும் பாதுகாப்பிற்காகவே அலுமாரிகளுள் வைக்கப்பட்டதாகவும், கணக்குப் பகுதியினர் தற்பொழுது அங்கே பரிசோதனை நடத்திக்கொண்டிருக்கும் பொழுதே இவைகள் யாவும் மறைந்துள்ளதாகவும் கூறப்படுகறது. பொலிசார் புலன் விசாரணை நடாத்தி வருகின்றனர்.

## சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், திங்கள்

கன்னாகம் மயிலணி சைவவித்தியாசாலையில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை தில்லையம்பல மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியர் திரு மா குமாரசுவாமி, பண்டிதர் திரு ச. கந்தசாமி ஆகியோர் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாறுகள் குறித்து பேசினர்.

மாவிட்டபுரம் ஓய்வு பெற்ற வித்தானையார் திரு. துரைச்சாமி சுந்தரமூர்த்திநாயனாரின் தேவாரங்களை பாடினார்.

# கள்வனுக்கும் கருணைபுரிந்த மீசாலை மாவடி விநாயகர்

— இ. த. சுப்பிரமணியம் —

மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் ஆடி அமாவாசையன்று கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகி செவ்வனே நடைபெறுகின்றது.

தேர், தீர்த்த வைபவம் முறையே 10, 11ந் திகதிகளிலும், பூங்காவன உற்சவம் 12ம் திகதியும் நடைபெறும் விநாயகப் பெருமானின் கருணையையும் தலவரலாற்றையும் இக்கட்டுரை சுருக்கமாக விளக்குகின்றது.

தென்மராட்சியில், மீசாலை புலைவிரல நிலையத்திற்கண்மையில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள் செய்யும் வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயிலில், கள்வன் ஒருவன் புகுந்து, தங்க யந்திரத் தகட்டையும், விலையுயர்ந்த நகைகளையும் அர்த்த இராத்திரியில் திருடிக்கொண்டு வெளியேறினான். அவன் கண்ணுக்குப் பெருமான் தோன்றிவிடினும், பல மனிதர் வரும் ஓசை ஒன்றை உண்டுபண்ணினர் உடனே அவன் களவாடிய பொருட்களுடன் முன்றல் உள்ள நெல்லி விருட்சத்தில் ஏறி மறைந்துகொண்டான்.

கோயில் மணியகாரனுக்கு கனவில் "அவனுக்கு கண்ணுந் தெரியாமல் நெல்லியில் இருக்கிறானடா. தண்ணீர் தெளித்து கண்ணை வெளிக்கப்பண்ணிவிட்டு பொருட்களையும் வாங்கி வையடா. அவனை தொல்லைப் படுத்தாதே" என்று கூறினர்.

விழித்தெழுந்த மணியகாரன் சென்று நெல்லியடியில் போய் அண்ணார்ந்து பார்த்ததும் கள்வனைக் கண்டார். ஆளை இறக்கி கோயில் கிணற்று நீர் தெளித்து கண்ணையும் தெளிக்கச் செய்து பொருட்களையும் பெற்றார்.

இத்தகைய பெருமானின் சந்நிதானம் இசைவிழாக்கள் நடக்கும் கலாக்ஷேத்திரமாகவும், ஊரவர்களின் சோலிகளைத் தீர்க்கும் நீதிஸ்தலமாகவும் இன்று விளங்குகின்றது.

உள்ளூர் ஆட்சிமன்றத் தேர்தல்களிலும் ஏனைய விஷயங்களிலும ஏற்பட்ட பல போட்டிகளையும் பெருமானுடைய சந்நிதானத்தில் தீர்ப்பது வழக்கம். பல தடவைகளில் போட்டியின்றி ஊராண்மைக் கழகத்திற்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முடிவுகளும் இச்சந்நிதானத்திலே நிறைவேறியதுண்டு.

ஊரவர்கள் பலர் தமது மக்களின் விவாகத்தைக் கூடக் குறைந்த செலவுடன் பெருமான் சந்நிதியில் நிறைவேற்றி செல்வத்துடனும் சீருடனும் வாழுவதை யாம் காணலாம்.

* * *

வெள்ளை மாமரத்தைச் சுற்றி மாஞ்சோலைகள் மிகுந்திருந்த காலத்திலே வெள்ளைமாவடிப் பிள்ளையாரின் ஊர்ப் பெயர் "மாசாலை" என விளங்கிற்று. மாமரங்கள், ஒட்டுமாமரங்களாகிப் பழைய மரங்களும் மறைய ஊர்ப் பெயரும் "மாசாலை" என்பது திரிந்து "மீசாலை" யாக மாறிவிட்டது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் கூட்டுப்பிரார்த்தனைகள் நடைபெற்றுவரும் இத்தலத்தில் 11ம் திகதி நடைபெறும் தேர்த் திருவிழாவில் சைவமங்கையர் அடியழித்துச் செல்ல, அடியார்கள் அங்கப் பிரதக்ஷணம் செய்யும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

# சமூக வளர்ச்சிக்காக மாணவர் உழைக்க வேண்டும்

## பூநகரி வித்தியாலய போட்டிகளில் வடபகுதி வித்தியாதிபதி

கோண்டாவில், ஞாயிறு

"மாணவன் ஒருவன் சமூகத்தில் ஓர் ஸ்திரமான வாழ்க்கையை நடாத்துவதற்கு கல்லூரியின் அன்றாட கல்வி வழிவகுக்கின்றது. ஆனால் அவன் சமூகத்தின் வளர்ச்சிக்கு உழைக்கவேண்டுமானால் இப்படியான பலவித போட்டிகளில் பங்குபற்றி சிறந்த வீரனாகத் திகழவேண்டும். இதற்குப் பாடசாலைகளில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள் உறுதுணையளிக்கின்றன. விளையாட்டுப் போட்டிகள் உடல் வளர்ச்சியை வளர்ப்பதுமட்டுமல்ல உளவளர்ச்சியையும் வளர்க்கும் சக்திவாய்ந்தது இதன் பயனாக மாணவன் ஒருவன் கட்டுப்பாடு என்பவற்றை மைதானத்தில் கற்றுக்கொள்கிறான். இவைகள் அவனது எதிர்கால நல்வாழ்விற்கு வித்திடுகின்றன"

பூநகரி மகாவித்தியாலயத்தின வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதமவிருந்தினராகக்கலந்துகொண்ட வடபகுதி வித்தியாபதி திரு கணிகாசலம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் பூநகரிக் கிராமம் மற்றக் கிராமங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் ஓர் வளர்ச்சியற்ற கிராமம். இப்படியான ஒரு கிராமத்தில் பலவித கஷ்டங்களின் மத்தியில் இப்படியான முற்போக்கமைந்த விளையாட்டுப்போட்டியை அமைத்த அதிபரையும் நிர்வாகஸ்தர்களையும் பாராட்டுவதில் வியப்பில்லை" என்றார்.

கந்தப்பு இல்லம் 209 புள்ளிகளைப் பெற்று இவ்வருட [illegible] தெரிவு செய்யப்பட்டது. கந்தப்பு இல்லம் செல்வத்துரை இல்லம், எட்வேட் இல்லம் ஆகிய இல்லங்களிடையே நடைபெற்ற போட்டி முடிவுகள்பின் வருமாறு:

**அணிநடை**

கந்தப்பு இல்லம், எட்வேட் இல்லம், செல்வத்துரை இல்லம்.

200 மீற்றர் (மத்தியபிரிவு) ஆண்கள்:- எஸ் பரமேஸ்வரன், கே சடாட்சரம், பி சிறீஸ்கந்தராசா. (மேற்பிரிவு) ஆண்கள்:- கே யோகநாதன், கே சுந்தரலிங்கம், எஸ் சின்னராசா.

கயிறடித்தல்: (கனிஷ்டபிரிவு) ஐ இராசராசேஸ்வரி, என். நாகேஸ்வரி, ரி பத்மதிரேசா, (மத்தியபிரிவு) கே மகேஸ்வரி பி பராசக்தி, எஸ் மகேஸ்வரி

பானை உடைத்தல்: (மத்தியபிரிவு) பெண்கள் பி பராசக்தி, என் உமாராணி, ஆர் தெய்வானை.

400 மீற்றர் (மத்தியபிரிவு) ஆண்கள்: எஸ சந்திரசேகரம், பி சிறிஸ்கந்தராசா, எஸ பரமேஸ்வரன், (மேற்பிரிவு) ஆண் என் சூரியகுமாரன், எஸ புலேந்திரன், எஸ் பரராசசிங்கம்.

சமநிலை ஓட்டம் (கனிஷ்ட பிரிவு) பெண்கள்: ஏ லீலாவதி, ஏ, இராஞ்சிதமலர், என். உதயலோசனி, (மத்திய பிரிவு) எஸ். எஸ் கனகம்மா, யே சிசிலியா எஸ் மகேஸ்வரி.

800 மீற்றர் (மேற்பிரிவு) ஆண்கள்: [illegible] கணேசன் எஸ் பரராஜசிங்கம், பி பரஞ்சோதி.

சங்கீத கதிரை: பெண்கள் எஸ், விஜயலட்சுமி, கே மகேஸ்வரி, எஸ் பத்மாவதி.

## புதிய வழக்கறிஞர்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த வாரம் திரு. எஸ். ஸ்ரீனிவாசன் நீதியரசர் மாணிக்கவாசகர் முன்னிலையில் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.



கொக்குவிலைச் சேர்ந்த காலம் சென்ற திரு. ஏ. சதாசிவத்தின் ஒரே மகனான இவர் ஆரம்பத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்று பின்னர் கொழும்பு சென். ஜோசப் கல்லூரியில் தொடர்ந்து கல்விகற்று இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் சேர்ந்து படித்தார்.

கல்லூரிப் படிப்பு முடிந்து வருமான வரி அதிகாரியாக 20 வருடங்கள் சேவை புரிந்த திரு. ஸ்ரீனிவாசன், சட்டம்படிப்பதற்காக 1961-ம் ஓய்வு பெற்றார்.

கிராம, விவசாய அபிவிருத்தியிலும் பல்வேறு நிர்வாக சேவைகளிலும் கலாச்சார விவகாரங்களிலும் அதிக அக்கறை செலுத்தி வந்த இவர் 1949-ல் கொழும்பில் நடைபெற்ற முதலாவது கலைவிழாவில் தமிழ் பகுதியை சிறப்பாக நடத்துவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. கலைத் துறையில் இவருக்கு அதிக ஈடுபாடு உண்டு. இவர் ஒரு நடிகர்மட்டுமல்ல பல தமிழ் நாடகங்களை எழுதி. தயாரித்து நடித்தும் இருக்கிறார். இவருடைய ஒரு நாடகமான 'இலங்கைகொண்ட ராஜேந்திரன்' இவரின் படைப்புகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும், இந்த நாடகத்தை காலம் சென்ற செனட்டர் நடேசன் வெகுவாகப் பாராட்டியிருந்ததுடன் இவரின் கலைச் சேவைக்கு ஊக்கமும் அளித்திருந்தார்.

கடந்த பொதுத் தேர்தலில் இவர் வவுனியா தொகுதியில் போட்டியிட்டிருந்தார்.

## டெஸ்ட் கிரிக்கெட்

நோட்டிங்ஹாம், ஆக; 8

தென்னாபிரிக்காவுக்கும் இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்டில் இரண்டாவது நாளான நேற்று இங்கிலாந்து தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதிவரை இரண்டு விக்கட்டுகள் நஷ்டத்துக்கு பத்து ஓட்டங்கள் எடுத்தது.

முதலில் விளையாடத் தொடங்கிய தென்னாபிரிக்கா தனது முதல் இன்னிங்ஸில் 269 ஓட்டங்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 289 ஓட்டங்களும் எடுத்தது. இங்கிலாந்து தனது முதலாவது இன்னிங்ஸில் 240 ஓட்டங்கள் எடுத்தது, இன்று இறுதி நாள்.

## "மனமுண்டு இடமில்லை"

### ஆசிரியரின் சம்பளம் குறித்து கல்வி மந்திரி

பம்பலப்பிட்டி, ஞாயிறு

"ஆசிரியர்களுக்கு கூடிய சம்பளம் கொடுப்பதற்கு எனக்கு விருப்பமுண்டு. ஆனால் நாட்டின் நிதிநிலை இதற்கு இடம் கொடுக்காது. முற்போக்குவாதிகள் என்று கூறிக்கொள்பவர்கள் நாட்டின் பொருள் உற்பத்திப் பெருக்கத்தை நாசமாக்கிவிட்டார்கள்."

கல்வி மந்திரி திரு: ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல கத்தோலிக்க ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பேசும்பொழுது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நிக்ருமாவின் குண்டுவீச்சு நிறுத்த யோசனையை ஜோன்ஸன் நிராகரித்தார்

## உயிருக்குப் பாதுகாப்பளிக்க முடியாது என்கிறது வடவியட்னும்

### "கானு அதிபரின் விஜயத்தின் போது ஹனேய் தாக்கப்படமாட்டாது — ஜோன்ஸன்

வாஷிங்டன், ஆக. 8

**வடக்கு வியட்னுமில் குண்டுகள் வீசுவதை தற்காலிகமாக நிறுத்துமாறு கானு அதிபர் நிக்ருமா விடுத்த கோரிக்கையை அமெரிக்க அதிபர் லிண்டன் ஜோன்ஸன் நிராகரித்துவிட்டார். வடக்கு வியட்னுமில் அமெரிக்க விமானங்கள் குண்டு வீசுவதை தற்காலிகமாக நிறுத்துவது குறித்து தாம் எத்தகைய வாக்குறுதியும் அளிக்கமுடியாது என்று அமெரிக்க அதிபர் திரு. ஜோன்ஸன் அறிவித்திருக்கிருர்.**



கானு வெளிநாட்டு மந்திரி திரு அலெக்ஸ் குவாய்ஸன் சாக்கி நேற்று அமெரிக்க அதிபர் ஜோன்ஸனிடம் கானு அதிபர் நிக்ருமாவின் செய்தி ஒன்றைக் கையளித்தார்.

**ஹானேய்க்கு விஜயம்**

வடக்கு வியட்னும் தலைநகரான ஹானேய்க்கு தாம் சமாதான யாத்திரையை மேற்கொள்ளப்போவதாகவும் இதற்குமுன்னேடியாக, அமெரிக்கா தனது குண்டு வீச்சை அங்கு நிறுத்த வேண்டுமென்றும் கோரி கானு அதிபர் நிக்ருமா அமெரிக்க அதிபருக்கு அனுப்பிய அச்செய்தியில் தெரிவித்திருந்தார்.

சமாதான யாத்திரையை மேற்கொண்டு தாம் பத்திரமாகத் திரும்புவதற்கு அமெரிக்கக் குண்டு வீச்சு நிறுத்தம் மிகவும் பயன்தரும் என்றும் அச்செய்தியில் அதிபர் நிக்ருமா அறிவித்திருந்தார்.

**யோசனையை ஏற்க மறுப்பு**

இது குறித்து அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் நேற்றுத் தெரிவிக்கையில், தென்வியட்னுமில் வடக்கு வியட்னுமின் ஆக்கிரமிபுகள் நிறுத்தப்படும்வரை அமெரிக்க விமானங்கள் தொடர்ந்து குண்டுகள் வீசும் என்றும் அதுவரைக்கும் வடக்கு வியட்னுமில் அமெரிக்கக் குண்டு வீச்சை நிறுத்த முடியாதென்றும் கூறினர்.

**உறுதிமொழி**

கானு அதிபர் டாக்டர் நிக்ருமா, வியட்னும் தலைநகரில் இருக்கும்பொழுது ஹனேய் (வியட்னும் தலைநகர்) தாக்கப்படமாட்டாது என்று அமெரிக்க அதிபர் ஜோன்ஸன் உறுதியளித்துள்ளார்.

**ஹனேய் அறிவிப்பு**

அமெரிக்க விமானங்கள் வடக்கு வியட்னுமில் குண்டுமாரி பொழியும் சமயத்தில் கானு அதிபர் இங்குவந்தால் அல்லது கானு அதிபரின் விஜயத்தின் போது அமெரிக்க விமானங்கள் குண்டுகள் வீசினுல் அதிபர் நிக்ருமாவின் உயிருக்கு தாங்கள் பாதுகாப்பு அளிக்கமுடியாதென்று வடக்கு வியட்னும அரசாங்கம் அறிவித்துள்ளது.

**சீனு மீண்டும் எச்சரிக்கை**

வடக்கு வியட்னும் மீதான அமெரிக்காவின் நடவடிக்கைகளை கம்யூனிஸ்ட் சீனு மீண்டும் கண்டித்திருக்கிறது. நேற்று பீக்கிங்கில் வெளியிடப்பட்ட சீன அரசாங்கத்தின் உத்தியோகபூர்வமான அறிக்கை ஒன்றில் அமெரிக்காவை அது வன்மையாக எச்சரித்துள்ளது.

வியட்னுமில் அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, அங்கு இராணுவ பலம் அதிகரிக்கப்பட்டால், சீனு நிச்சயம் தலையிடுமென்றும் சீனத்துருப்புகள் வடக்குவியட்னுமுக்கும் தேவைப்படின் தென்வியட்னுமுக்கும் அனுப்பிவைக்கப்படுவார்கள் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சண்டை நீடிக்கிறது**


இதற்கிடையில் தென்வியட்னுமில் நேற்று வியட்காங் கொரில்லாக்கள் ஒரு போக்குவரத்துப் பாதையைத் துண்டித்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுளது. தென்வியட்னும் தலைநகர் சைகோனுக்கும் தென்வியட்னும் அரசாங்க துருப்புகளின் ஒரு நிலைக்குமிடையேயுள்ள ஒரு பாதையை வியட்காங்கொரில்லாக்கள் நேற்றுத் தகர்த்தெறிந்துவிட்டனர்.

**வியட்னுமில்**

வடக்குவியட்னும் மீது அமெரிக்க விமானங்கள் நேற்று குண்டுமாரி பொழிந்து தாக்குதல்கள் நடத்தியிருக்கின்றன. எண்ணெய்க் கிடங்குகள் வெடிமருந்துச்சாலைகள், ஆஸ்பத்திரிகள் ஆகியன நேற்று நடைபெற்ற அமெரிக்க விமானங்களின் குண்டுவீச்சினுல் தவிடு பொடியாகிவிட்டன.

**ஆறு விமானங்கள் சுடப்பட்டன?**

வடக்கு வியட்னும் மீது பறந்த அமெரிக்க விமானங்களில் ஆறு நேற்று சுடப்பட்டு வீழ்த்தப்பட்டதாக சீன செய்தி ஒன்று கூறுகிறது.



## தொடர்ந்து உதவி கிடைக்கும்

பெர்லின், ஆக. 8

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு பிரதமர் திரு. விலி ஸ்டொப் வடவியட்னும் பிரதமர் அனுப்பியுள்ள ஒருசெய்தியில் இருநாடுகளுக்குமிடையே உள்ள உறவுகளைத் தெளிவுபடுத்தியுள்ளார். இச்செய்தியை வடக்குவியட்னும் தூதரிடம் கையளித்த ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் உதவி வெளிவிவகார மந்திரி டாக்டர் கீசெவெட்டர், துணிச்சல் மிக்க வியட்னும் மக்களுக்குத் தனது அரசாங்கம் தொடர்ந்து உதவி புரியும் என்று வாக்களித்தார். தற்போது வியட்னுமிலுள்ள நிலைமையை தூதர் அவர்களுக்கு விளக்கிக் கூறினுர்.

## ஐரோப்பாவை வியட்னுமாக்க திட்டம்

ஹெல்சிங்கி, ஆக. 8

ஹெல்சிங்கியில் (பின்லாந்து) நடைபெற்ற உலகக்காங்கிரசில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு தூதுகோஷ்டித் தலைவர் பேராசிரியர் அல்பர்ட் நோர்டன் விடுத்த ஓர் எச்சரிக்கையில், ஐரோப்பாவில் குமுறும் கொந்தளிப்புக்கும், வியட்னுமில் அமெரிக்காவின் ஆக்கிரமிபுக்குமிடையேயுள்ள தொடர்பைத் தெளிவுபடுத்தினர். ஐரோப்பாவில் கொந்தளிப்பான நிலைமையை உண்டாக்கி ஐரோப்பாவையும் ஒரு வியட்னுமாக்க முயற்சிகள் செய்யப்படுகின்றனஎன்று பேராசிரியர் நோர்டன் குறிப்பிட்டார்,

## மேற்கு ஜெர்மனியில் அணு ஆயுதம்

ஹெல்சிங்கி, ஆக 8

"அமெரிக்காவின் அணு ஆயுதங்களில் மூன்றில் ஒரு பகுதி மேற்குஜெர்மனியில் வைக்கப்பட்டுள்ளது" என்று ஹெல்சிங்கியில் (பின்லாந்து) நடைபெற்ற உலகக் காங்கிரசில் ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் பிரதிநிதி பேராசிரியர் நோர்டன் பேசுகையில் கூறினுர். அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக மேற்குஜெர்மனியிற்தான் அதிகமான அணு ஆயுதங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதென்றும், நேட்டோ நாடுகளில் மிகப் பெரிய படை மேற்கு ஜெர்மனியிடம் இருக்கிறதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## "பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒருவருட அவகாசம் தருக!"

### தமிழ் பேசும் மக்களுக்கு மந்திரி திருச்செல்வம் வேண்டுகோள்

குரும்பசிட்டி, ஞாயிறு

"மக்களுக்கிடையில் மனத்தைரியம், ஊக்கம் இருப்பதனுல் நாடு முன்னேற்றம் அடைய வழிகாட்டியாக இருக்கும். சமூக சேவைகள் செய்து தேச ஒற்றுமைக்கு வித்திட்டு மனத்தோடு வாழ தமிழ் பேசும் மக்கள் முன்வரவேண்டும். தேசிய அரசாங்கத்திற்கு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரினதும் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்கப்பட்டுள்ளதால் நாட்டில் ஐக்கியம் ஏற்பட முடிந்தது. தமிழ் அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் ஒரு சில கருத்து வேறுபாடுகள் உண்டுதான், ஆகவே அதனை வைத்துக்கொண்டும் மேடை சொற்பொழிவுகளை உதாரணம் காட்டியும் ஒற்றுமை இல்லை என்று கூறுவது முற்றிலும் தவறு தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு, மலைநாடு என்று பாகுபாடு பாராது ஒரு மனதாக வாழ்ந்து நமது மொழியை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிர்வாக ஆட்சி மொழியாக்க ஆவன செய்ய வேண்டும்"

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமா

(4-ம் பக்கம் பார்க்க)

## ஜெர்மன் பறவைக்கு அலுமினிய அலகு

ஹாம்பர்ச், ஆக. 8

வடஜெர்மனியில் வாழ்கிற ஒருவகை பறவை 'ஸ்டார்க்' என்பது இதற்குச் சமுத்தும் கால்களும் நீண்டு இருக்கும். மூன்றரை அடி நீளம் இருக்கும். இவைகள் உயரமான இடங்களில் கூடுகட்டிவாழும்.

ஒரு தடவை குஞ்சாக இருக்கிறபோது இந்தப் பறவைகளின் பெண் ஜதியைச் சேர்ந்த குஞ்சு ஒன்று கூட்டில் இருந்து கீழே விழுந்து விட்டது. இதை ஒரு விவசாயி எடுத்துவளர்த்து, தன் பண்ணையில் வைத்திருந்தார், ஏனென்றால் இப்பொழுதெல்லாம் இவ்வகையான பறவைகளை காண்பது அபூர்வம். இதைக் கூட்டில் அடைக்காமல் தனியாக விட்டுவிட்டாலும் கூட எங்குசென்றாலும் திரும்பி தங்க இங்கு வந்துவிடும்.

ஒருநாள் ஒரு மீனை இது விழுங்க எடுத்துவிட்டது. உடனே பண்ணை வேலையாள் இப்பறவையை காட்டுத்தனமாக அடித்ததில் இதன் அலகின் மேல் பகுதி உடைந்துவிட்டது. எவ்வளவோ முயன்றும் அந்த அலகுக்கு எதுவுமசெய்ய முடியாமல் கடைசியாக அலுமினியத்தினுல் செய்த செயற்கை அலகை பொருத்தினர்கள். அது இயற்கை அலகுபோலவே அதற்குப்பயன்படுகிறது.

## மலிவு விலையில் ஆடம்பரக் கார்

மூனிச், ஆக. 8

ஜெர்மனியின் மோட்டார் கார் உற்பத்தியில் ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டுள்ளது. மலிவு விலையில் நவீன வசதிகள் அத்தனையும் கொண்ட ஆடம்பரக் காரைத் தயாரித்திருக்கின்றனர். இப் புதிய கார் மிகவும் வேகமாக ஓட்டுகிறவர்களின் ஆசையையும் பூர்த்திசெய்கிறது, இதில் 120 குதிரைவேகம் உள்ள இரு லிட்டர் என்ஜினுடன் மணிக்கு 200 கிலோ மீட்டர் தூரம் இது போகும். இது மணிக்கு 60 கிலோ மீட்டர் வேகம்போகக்கூடியது பின்பு ஓட ஓட மணிக்கு 100 கிலோ மீட்டர் ஓடபோகும். இதன் சிறப்பான அம்சம் என்ன வென்றால் தானுக இயங்குகிற 'கியர்' மாற்றங்கள்.

## கடல் விளையாட்டுப்போட்டி

கீல், ஆக. 8

வடஜெர்மனி துறைமுகப் பகுதியான கீல் என்ற இடத்தில் ஆண்டுதோறும் ஜூன் மாதக் கடைசிவாரத்தில் கடலில் படகுகளை ஓட்டும் பந்தய விளையாட்டு நடைபெறும். இப்போட்டியில் கலந்துகொள்ள ஒலிம்பிக் பந்தயங்களில் வென்றவர்கள் முதல் சாதாரண ஆட்கள்வரை வந்து கலந்துகொள்வார்கள். இங்கு வெற்றிபெற்றவர்களுக்குக் கிடைக்கும் கேடயம்பெறுவதற்கு உரிய அரும்பொருளாக அனைவரினுலும் கருதப்படுவதே இதற்குக் காரணமாகும். கீல்நகர் இன்று பெரிய கலாசார, கலைக்கேந்திரமாகவும் விளங்குகிறது.

## சர்வதேச தொழிற்சங்க ஒற்றுமை

பெர்லின், ஆக. 8

அக்டோபரில் வார்சாவில் (போலந்து) நடைபெறவிருக்கும் உலக தொழிற்சங்க சம்மேளனத்தின் 6-வது கவுன்சிலில் பங்குபற்றுவதற்காக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின தொழிற்சங்க சம்மேளனம் ஒரு தூதுகோஷ்டியைத் தெரிவுசெய்துளளது.

## இனஒதுக்கலுக்குக் கண்டனம்

ரோஸ்டொக், ஆக 8

9 வட ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த 624 பிரதிநிதிகள் ஜெர்மன் ஜனநாயகக்குடியரசில் தங்களின் 8-வது வருடாந்த மகாநாட்டை நடத்தினர் தென்னுபிரிக்க அரசாங்கத்தின் இன ஒதுக்கல் கொள்கை மகாநாட்டில் வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

## ஹெல்சிங்கி காங்கிரசுக்கு அனுப்பிய செய்தி

ஹெல்சிங்கி, ஆக. 8

ஹெல்சிங்கியில் நடைபெற்ற உலக சமாதான தேசிய சுதந்திர படைக்குறைப்பு காங்கிரசுக்கு ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஜனதிபதி உல்பிரிச் அனுப்பிவைத்த செய்தியில் வியட்நுமில் அமெரிக்க ஆக்கிரமிப்பை நிறுத்தவும், பூரண படைக்குறைப்பை ஏற்படுத்தவும் காங்கிரஸ் செய்யும் முயற்சிக்கு நிபந்தனையின்றி உதவியளிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

"ஜெர்மனிலிருந்து மற்றொரு யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க நாங்கள் தயார். இரு ஜெர்மன் ராஜ்யங்களும் அணு ஆயுதங்களைச் சேகரிக்கவோ, இறக்குமதி செய்யவோ, உற்பத்தி செய்யவோ, வைத்திருக்கவோ கூடாது என்று தடுக்கும் ஓர் ஒப்பந்தத்திலே கைச்சாத்திடவும் நாங்கள் தயார். வார்சா ஒப்பந்த நாடுகளுக்கும், நேட்டோ நாடுகளுக்குமிடையே அனுக்கிரமிப்பு ஒப்பந்தம் ஏற்பட்டால் அதில் ச்சாத்திடவும் நாங்கள் தயார்" என்று ஜனதிபதி உல்பிரிச் தமது செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக் கிராமங்களின் முக்கிய பிரச்னைகள்

## தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க ஸ்தலஸ்தாபன மந்திரி வாக்குறுதி

யாழ்ப்பாணம், திங்கள்

"வடபகுதியிலுள்ள தண்ணீர் கஷ்டத்தை தீர்ப்பதற்கு தண்ணீர் கட்டுப்பாட்டு அவகி மெனது அண்மையில் இங்கு விஜயம்செய்த இலங்கை நிபுணர் சொன்ன அதே கருத்தை நான் இங்கு வற்புறுத்தவிரும்புகிறேன். வடபகுதியில், குறிப்பாக தீவுப் பகுதியில் தண்ணீர் பெரும் பிரச்னையாக இருக்கிறதென்பதைத் நான் உணர்கிறேன். புதிய யந்திர முறைப்படியும் தண்ணீர் கஷ்டத்தை போக்குவதற்காக வழிவகைகளை ஆராய்ந்துள்ளோம். விரைவில் வெளிநாடுகளிலிருந்து யந்திரங்கள் வரவழைக்கப்பட்டு இத்தண்ணீர்ப் பிரச்னையைத் போக்குவதற்கான வழிவகைகளைச் செய்யவிருக்கிறோம்."

யாழ்ப்பாணம் மாவட்ட கிராமசபைத் தலைவர்களின் மகாநாடொன்றில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் உரை நிகழ்த்துகையில் மேற்கண்டவாறு கூறினார். யாழ். 'புளூரிபன்' ஹோட்டலில் மந்திரிக்கு கிராம சபைத் தலைவர்கள் அளித்த மதிய போசன விருந்தையடுத்து அங்கு இம்மகாநாடு இடம்பெற்றது. புலோப்பளை கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தலைமை வகித்தார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இம் மகாநாட்டில் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. கிராமசபைத் தலைவர்கள் தன்முன் சமர்ப்பித்த சகல கோரிக்கைகளுக்கும் மந்திரி பதிலளித்தார்.

### மகாவலிகங்கை உடனே திரும்புமா?

"வடபகுதியிலுள்ள தண்ணீர் கஷ்டம் மகாவலிகங்கையை வடக்கே திருப்பினாலொழிய வேறு எந்த விதத்திலும் தீர்க்க முடியாது. அண்மையில் இங்கு விஜயம் செய்த காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வாவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு மகாவலி கங்கையை வடக்கே திருப்ப ஸ்தலஸ்தாபன மந்திரி முன்வர வேண்டும்" என்ற தமது அபிப்பிராயத்தை நாரந்தனை கிராமசபைத் தலைவர் மந்திரியிடம் தெரிவித்தார்.

மகாவலிகங்கையை வடக்கே திருப்பி அதன் மூலம் தண்ணீர் பிரச்னையைத் தீர்த்து வைப்பது நல்லதொரு திட்டமென்றும், உடனடியாக அத்திட்டம் நிறைவேற்ற முடியாதிருப்பதால் முதலில் தற்காலிகமாக தண்ணீர் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்கு ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டியிருக்கிறதென்று மந்திரி திருச்செல்வம் பதிலளித்தார்.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்சாரம் மூலம் விவசாய அபிவிருத்தியைப் பெருக்குவது கிராம சபைகளுடைய பொருளாதாரத்தை விருத்தியடையச் செய்யக் கூடியதாயும், எனவே, இந்நோக்கத்துடன் விண்ணப்பித்த கோப்பாய், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, அச்சுவேலி, மல்லாகம் முதலான கிராமசபைகளின் மின்சார அபிவிருத்திக்கு கடன் பணம் முழுவதும் கிடைக்கவில்லை. அப்பணத்தைக் கூடிய விரைவில் கிடைப்பதற்கு ஒழுங்குகள் செய்ய வேண்டுகிறோம்" என்று மின்சாரம் சம்பந்தமாக கிராமசபைத் தலைவர்கள் சமர்ப்பித்தகோரிக்கைக்கு மந்திரி பதிலளித்தார்.

### சுயமுயற்சி முக்கியம்

"ஸ்தலஸ்தாபன மன்றங்களின் சகல பிரச்னைகளையும் தீர்த்துவைப்பதற்கு நாம் அரசாங்கத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. அப்படி எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் நமது பிரச்னை தீராதவொரு பிரச்னையாகவே இருந்துகொண்டிருக்கும். மின்சாரத்தைப்பொறுத்தவரையில் அதே கருத்தையே சொல்ல விரும்புகிறேன் அரசாங்கம் எமக்குப் பணவசதி செய்யாவிட்டால் நாம் எமது பகுதிகளுக்கு மின்சார வசதிகள் செய்யாத ஒரு பிற்போக்குப் பகுதியாகவைத்துக்கொண்டிருக்கலாமா? சுயமுயற்சி மூலம் இப்பிரச்னையைத் தீர்த்துக்கொள்ள முயல வேண்டும்." என்று மந்திரி சொன்னார்.

கிராம சபைகளில கிராம சபைத்தலைவர்களுக்கு எதிராக இயங்கும் ஊழியர்களை உடனடியாக இடமாற்றம் செய்யப்படவேண்டுமென்ற தமது கருத்தை அரச்சிக கிராம சபைத் தலைவர் திரு வி. ஆனந்தசங்கரி மந்திரியிடம் தெரிவித்தார்.

தகுந்த சாட்சியங்களுடன் ஊழியர்கள் தலைவர்களுக்கு எதிராக இயங்குகிறார்கள் என்று நிரூபித்தால் அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்யலாமென்று மந்திரி கூறினார்.

இரண்டு உள்ளூராட்சி மன்றங்களில் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடாதென்ற சட்டத்தைத் திருத்திஅமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை மந்திரி பரிசீலனை செய்வதாக அவர்களிடம் சொன்னார்.

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் முடிவடைந்தவுடன் உடனடியாக மானியங்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்படவேண்டுமென்ற கிராமசபைத்தலைவர்களின் கோரிக்கையைப் பரிசீலனை செய்து ஆவன செய்வதாக மந்திரி தெரிவித்தார்.

நீர்ப்பாசன இலாகா பதில் கமிஷனர் திரு பெருமையினார் தண்ணீர்ப் பிரச்னையைத்தீர்த்துவைப்பதற்கான தமது கருத்துக்களை விளக்கமாக எடுத்துக்கூறினார்: மின்சார எஞ்ஜினியர் முருகேசு மின்சாரவிநியோகத்திலுள்ள பிரச்னைகள் குறித்தும் அதனைத் தீர்த்து வைப்பதற்கான புதுமுறைத் திட்டங்களையும் சொன்னார்.

"நான் மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு நாட்டிலுள்ள பல பகுதிகளுக்கும் சென்று அங்குள்ள பிரச்னைகளைக் கவனித்திருக்கிறேன். வடபகுதியைவிட பலவிதமான கஷ்டங்களாலும் தென்பகுதி மக்கள் கஷ்டப்படுவதைபார்த்திருக்கிறேன். கல்வி மந்திரி இரியகொல்லை இங்கு விஜயம் செய்தபோது தென்பகுதியில் ஆசிரியர்கள் தொகை இங்குள்ள தொகையை விட பல மடங்கு குறைவாக இருக்கிறதென்று ஒளிவுமறைவின்றிக் கூறியதுபோல தென்பகுதி மக்கள் பல பிரச்னைகளால் தாக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்" என்று மந்திரி தம்முன் சமர்ப்பிக்கப்பட்ட சகல கோரிக்கைகளுக்கும் பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"மற்றைய இடங்களிலுள்ள பிரச்னைகள் பணத்தைக் கொண்டே தீர்த்துக்கொள்ளலாம். ஆனால் வடபகுதிப் பிரச்னை தனியே பணத்தை வைத்துத் தீர்த்துக்கொள்ளக் கூடியதொன்றல்ல. தண்ணீர்ப் பிரச்னை போன்ற இங்குள்ள பல பிரச்னைகள் இயற்கையுடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கின்றன. ஆகையால் இலகுவில் குறுகிய காலத்தில் தீர்த்துக்கொள்ள முடியாது" என்றும் மந்திரி சொன்னார்.

[illegible] கிராமசபைத் தலைவர் திரு [illegible] ஆ [illegible] நன்றிகூறினார்.

## "பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐத்திரால் தமக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்து உபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசும்போது கூறினர்.

யாழ்ப்பாணம் "பாம் கோட்" விடுதியில் நிகழ்ந்த இவ்வுபசார விருந்தில் அமைச்சர் திரு திருச்செல்வம் மேலும் குறிப்பிட்டதாவது:-

உள்ளூராட்சி மன்ற சமாஜம் இன்று நிறைவேற்றியுள்ள ஏகமனதான தீர்மானமொன்றில் நாட்டில் மாவட்ட சபைகள் நிறுவப்படவேண்டுமென்று கோரியுள்ளனர். இது வரவேற்கத்தக்கது. மாவட்ட சபைகள் ஏற்படுவதால் தமிழ் மாகாணங்களில் தமிழ்ப் பாஷையில் கல்வி பயில வாய்ப்பு உண்டாகும். மந்திரி சபையில் வேறுபாடுகள் பிளவுகள் ஒன்றும் இல்லை தமிழரை எதிர்நோக்கி பல பிரச்னைகள் உண்டு. ஆனால் இழந்த உரிமைகள் சிலவற்றை மீட்டுக்கொள்ளமுடியும். பத்திரிகைகளும் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்து வருகின்றன நாட்டிலே வாழ்க்கைத் தரம் மிக உயர்வாக இருக்கின்றது கல்வி முன்னேற்றம் தமிழ் பகுதிகளில் உயர்ந்துள்ளது. நாட்டின் வடக்கு கிழக்கு தென் பகுதிகள் எல்லாவற்றிலும் பிற்போக்கான பகுதிகளை முன்னேற்ற எதுவித பாகுபாடுகளையும் பாராது தேசிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

### உரிமைகளை பெற்றுக்கொடுப்பேன்

தமிழ் பேசும் மக்கள் எனக்கு மிகப் பெரிய பொறுப்பினை தந்துள்ளனர் நான் எனது நேர் வழியான நேர்மை மூலம் தமிழரின் இழந்த உரிமைகளை பெற்றுக்கொடுப்பேன். தமிழ் அரசாங்க ஊழியர்களின் விஷயத்தில் தாய்மொழியில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர். சிங்கள மக்கள் எப்படியான வசதிகளைப் பெறுகின்றனரோ, எந்த வழியில் நடாத்தப்படுகின்றனரோ அதேவிதம் தமிழ் மக்களும் நடாத்தப்பட வேண்டுமென நமது பிரதமர் விரும்புகின்றார். எதிர்க்கட்சியினர் ஜாதி, சமய துவேஷங்களை கிளப்பிவிட எத்தனிக்கின்றனர் எனவே தமிழ் மக்கள் பொறுமையோடு இருக்க வேண்டும். பிரச்னைகள் தீர ஒரு வருட அவகாசம் தரும்படியும் கேட்டுக்கொள்கின்றேன்

### ஒரு லட்சம் படித்த வாலிப

புள்ளிவிபரங்களின்படி நாட்டிலே சுமார் ஒரு லட்சம் எஸ். எஸ். சி. படித்துச் சித்தியடைந்தோர் வேலைவாய்ப்புக்கள் எதுவும் இன்றி இருக்கின்றனர். வேலையில்லாப் பிரச்னை தமிழ்ப் பகுதியில் மாத்திரமில்லாது தென்பகுதியிலும் கூடுதலாக உண்டு ஆனால் தமிழர்கள் மத்தியில் பட்டதாரிகளாக வேலையற்றோர் தொகை தென்பகுதியைவிட கூடுதலாக இருக்கின்றது. நமது கல்வி மந்திரி பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை அளிக்க திட்டங்கள் வகுத்து செயலாற்றி வருகின்றார். எனவே கூடிய விரைவில் கல்வி மந்திரியின் உதவியுடன் பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்னையை தீர்த்து வைப்பேன்.

இந்த விருந்து உபசாரத்திற்கு கேட் முதலியார் திரு. சி. தியாகராசா தலைமைவகித்தார். "எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அமைத்த தேசிய அரசாங்கம இனஒற்றுமையை ஏற்படுத்த முயலவேண்டும் நாட்டு மக்களின் கஷ்டங்களை நிவர்த்திக்க ஆவனசெய்யவேண்டும் நாட்டிலே சமூக சேவைகளை கூட்டாக சேர்ந்து நடாத்த உடனடியாக சன சமூக நிலையங்களின் ஸ்தாபனம் ஒன்றினை நிறுவ அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் உள்ளூராட்சி மன்றங்கள் ஆண்டுதோறும் தமது நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தயாரித்து மக்களுக்கு தெரியப்படுத்தல் வேண்டும் அரசாங்க இலாகாக்கள் எல்லாவற்றிலும் இந்த முறை பின்பற்றப்பட்டு வந்த போதிலும் உள்ளூராட்சி இலாகாவில் கையாளப்படுவதில்லை. நமது நாட்டில் தேர்தலில் கட்டாய வாக்களிப்பு அமுல் நடாத்தப்படவேண்டும் ஆஸ்திரேலிய தேசத்தில் உள்ளது போல நாமும் செயல்படுத்தவேண்டும். சன சமூக நிலையங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் அரசாங்க நன்கொடை முறைகள் தவறானது. ஸ்தலஸ்தாபன சபைகள் மூலம் வழங்குவதால் அரசியல் தலையீடுகள் தலைதூக்குகின்றன அரசியல் பாகுபாடு காட்டப்படுகின்றது. எனவே முன்னர் வழக்கத்தில் இருந்து வந்த முறைபோன்று உள்ளூராட்சி ஆணையாளர் மூலம் அரசாங்க நன்கொடைகள் வழங்கப்பட வேண்டும்.

இந்த விருந்து உபசாரத்திலே யாழ். மாநகர மேயர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

★ கோவில் அபிஷேகம், திருவிழாக்கள்
★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம்
★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும் அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவு சூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனாதிகள், பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம், நெய் முதலிய சகல சாமான்களும்
மற்றும்
சந்தனம், குங்குமம், சாந்துப்பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள்
★ சுகந்த சந்தனப் பவுடர்
★ பச்சைச் சந்தனம்
(உடன் யந்திரத்தினால் அரைத்தது)
எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு:
அடியார்களின் வசதியை முன்னிட்டு நல்லூர் மேற்கு வீதியில் (பருத்தித்துறை வீதி) விற்பனை நிலயம் ஒன்றை நிறுவியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

எஸ்.
சுப்பிரமணியம் அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் வியாபாரம்)
53, காங்கேசன்துறை வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். போன்: 541, 7068
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.



## விளம்பரம்

### முல்லைத்தீவுப் பட்டணசபை
### கேள்வி விளம்பரம்

1. 1965ம் ஆண்டு ஆவணி மாதம் 16ம் தேதி திங்கட்கிழமை காலை 10-00 மணிவரை முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவரால் சின்னுத்தங்காடு வீதி திருத்துவதற்கான வேலைக்கு சீல் வைத்த கேள்விகள் இரு பிரதிகளில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2 கேள்விகள் பட்டணசபை அலுவலகத்தில் அதற்கென அமைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் போடப்பட வேண்டும். அல்லது பதிவு தபால் மூலம் முல்லைத்தீவு பட்டணசபைத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும். கேள்வியைக் கொண்ட காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் சின்னுத்தங்காடு வீதி திருத்துவதற்கான வேலைக்கு கேள்வி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

3 ரூபா 50-00 பிணைப்பணமாகக் கட்டியதன்பின் பட்டணசபைத் தலைவரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தாக்கல் செய்யப்படுதல்வேண்டும். பிணைப்பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு கேள்விப் பத்திரத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

4 கேள்விகளில் உள்ள மாற்றங்கள் அழித்தல்கள் யாவும் கேள்விக்காரரின் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தல் வேண்டும்.

5. ஒருவரது கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டமை அறிவிக்கப்பட்ட ஒரு வாரத்துக்குள் தலைவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு வேலையை ஆரம்பிக்கத் தவறும் ஒப்பந்தக்காரர் எவருக்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50 00 திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

6 கேள்விக்காரரை முடிவாகத் தெரிவு செய்வதற்கு முல்லைத்தீவுப் பட்டணசபைத் தலைவருக்கு காரணம் காட்டாமல் எந்த அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கும் உரிமையும் ஒரு கேள்வியின் எந்த பகுதியையும் ஏற்கும் உரிமையும் உண்டு.

7. கேள்விப் பத்திரங்கள் 14-8-1965 நண்பகல் 12-00 மணிவரை பட்டணசபை அலுவலகத்தில் மேற்போந்த நிபந்தனைகளுக்கிணங்க வழங்கப்படும்.

8. கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 10-00 இக்காரியாலயத்தில் செலுத்தப்படல் வேண்டும். இப்பணம் எக்காரணம் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

அ. சந்திரப்பிள்ளை
தலைவர்,
பட்டணசபை, முல்லைத்தீவு
பட்டணசபைக் காரியாலயம்,
2-8-1965, முல்லைத்தீவு. 497




REGAL - JAFFNA
NOW SHOWING
Steve Reeves
In
SANDOKN THE GREAT
(Techniscope - Technicolour)
FILM SHOT IN CEYLON



இப்பொழுது வெற்றிமுரசு கொட்டுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) | நீவாணி (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | மொடேர்ன் (பதுளை)
விஜிதா (ஹட்டன்) | தீவொளி (நுவரெலியா) | கல்யாணி (காவலப்பிட்டி)
லக்ஷ்மி (இரத்தினபுரி) | அயன் (மன்னர்)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
மற்றும்பலர் நடிக்கும்
நீதிக்குப்பின் பாசம்


யாழ்ப்பாண மாவட்டம்

# கல்லூரிகளின் விளையாட்டுப் போட்டிகளில் ஆறு புதிய சாதனைகள்

## யாழ். மத்திய கல்லூரி மீண்டும் முதலிடம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் கடந்த மூன்று தினங்களாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டிகளில் 1965 யாழ் மத்தியகல்லூரி 191 1/2 புள்ளிகள் பெற்று இம்முறையும் முதலிடம் வகித்தது. இந்தப் போட்டிகளில் ஆறு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

இந்த விளையாட்டுப்போட்டிகள் கடந்த வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களிலும் நடைபெற்றன. இப்போட்டிகளுக்கு ஓய்வு பெற்ற ஸ்கந்தவரோதயா அதிபர் திரு சுப்பிரமணியம் தலைமை வகித்தார். திருமதி சுப்பிரமணியம் பரிசுகள் வழங்கினர்.

### புதிய சாதனைகள்

○ மேற்பிரிவில் ஆண்டுகளுக்கான 200 மீட்டர் ஓட்டப் போட்டியில் நடேஸ்வராக் கல்லூரியைச் சேர்ந்த சற்குணசீலன் 25 1 வினாடி நேரத்தில் தூரத்தை முடித்து புதிய சாதனையை நிலைநாட்டினர்.

○ 4 X 100 மீட்டர் அஞ்சல் ஓட்டம் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி — நேரம் 55 8 வினாடிகள் புதிய சாதனை.

○ 100 மீட்டர் ஓட்டம் 14 வயதுக்குட்பட்டவர்கள் இராசசிங்கம் (யாழ். ம. க) நேரம் 12 9 வினாடிகள் புதிய சாதனை

○ கீழ்ப்பிரிவு 250 மீட்டர் ஓட்டம் சிவனருள்சுந்தரம் (சிதம்பராக்கல்லூரி) நேரம் 25.3 வினாடிகள் புதிய சாதனை

○ கீழ்ப்பிரிவு 100 மீட்டர் ஓட்டம் சிவனருள்சுந்தரம் (சிதம்பரா) 12.5 வினாடிகள் புதிய சாதனை.

○ கீழ்ப்பிரிவு — 110 மீட்டர் தடைஓட்டம் திருஞானசம்பந்தமூர்த்தி (யா. இ. க,) நேரம் — 16.6 வினாடிகள் புதிய சாதனை.

### பேட்டி முடிவுகள்

மற்றைய போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

மேற்பிரிவு: (ஆண்கள்) உயரம் பாய்தல் இளஞ்சேன, மகாஜனு - பாலதேவன், சோமஸ்கந்தா-யோகேந்திரன்மகாஜனு-சில்வைல்ரா. ஸ்ரான்லி- சரபவநாதன், யூனியன்-தவம், உடுப்பிட்டி. நீளம் பாய்தல் சண்முகலிங்கம், ம க-மனோகரன், ம க-சயிதுல்மெயில், மகாஜனு- நாகரத்தினம், யா இ க- சகுனேந்திரன், மகாஜனு- நவரத்தினராசா, ஸ்கந்தா- பதிவெட்டம் எறிதல் குமரன். யா ம க-ஜெகதீசா, மா இ க- நாகரத்தினம், யா இ ம- சுரேந்திரா, சிதம்பரா-லோகநாதன், மகாஜனு-அலோசயல், க ம ம வி. 400 மீட்டர் சந்திரசேகரம், மகாஜனு- ரவீந்திரநாதன், மா இ க -ஜெகநாதன், யா ம க - கனகரத்தினம், டிறிபேக் - மகேஸ்வரன், யா ம க. தாண்டிப்பாய்தல் சண்முகலிங்கம், யா ம க - நாகரத்தினம், யா இ க - அலோசியஸ், கனகரத்தினம், ம ம வி- மனோகரன், யா ம க ம-தேவேந்திரராசா, யா இ க - புவனேந்திரன், மா இ க, 800 மீட்டர் சிறீகாந்தன், உ இ க- ஜீவராசா க ம ம வி. 200 மீட்டர் சற்குணசீலன், நடேஸ்வரா-நிர்மலானந்தா, ஸ்கந்தா-புவனேந்திரன், யா ம க, குண்டெறிதல் குமரன், யா ம க- தேவதாசன், யா ம க- தர்மச்சந்திரன், மகாஜனு. 4 × 100 மீட்டர் அஞ்சலோட்டம் மகாஜன, யாழ் மத்தியகல்லூரி, மணிப்பாய் இந்துக்கல்லூரி, 100 மீட்டர் சற்குணசீலன், நடேஸ்வரா- புவனேந்திரன், யா ம க- சயிதுமெயில், மகாஜனு- ஈட்டியெறிதல் ஜெகதீசன், மா இ க-பாலசுப்பிரமணியம், உடுப்பிட்டி- காந்தசீலன், நடேஸ்வரா- 4 X 100 மீட்டர் அஞ்சலோட்டம் (14 வயதிற்குட்பட்டோர்) யா. மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி. 100 மீ [illegible] யா ம க-புவனேந்திரன் யா ம

ஃ 1500 மீட்டர் சிறீகாந்தன் உ இ க-நவரத்தினம், மகாஜனு, கணேசன், மா இ க. தடியூன்றிப்பாய்தல் ஜெயரத்தினம், க ம ம வி-லிங்கம், யா இ க- ராசநரேந்திரா, மா இ க, 4 X 400 மீட்டர் அஞ்சலோட்டம் மகாஜனுக்கல்லூரி, யாழ். மத்தியகல்லூரி, கனகரத்தினம் ம ம வி. 100 மீட்டர் (14 வயது) இராசசிங்கம், யா ம க- சிவபாலன், யாழ். ம க- அந்தரலிங்கம், கொ இ க.

கீழ்ப்பிரிவு: நீளம் பாய்தல் சிவஞானசுந்தரம், சிதம்பரா-திருஞானசம்பந்தர், யா இ க-சத்தியநாதன், யூனியன். உட்டி எறிதல் தனபாலசிங்கம், ம க-ராகிருஷ்ணலால், யா இ க-சிறீகாந்தராசா, மகாஜனு 200 மீட்டர் சிவனருள்சுந்தரம், சிதம்பரா-கனபதி, யா இ க-நாகரத்தினம் மகாஜனு, குண்டெறிதல் ஜெகதீஸ்வரன், மா இ க-துரைராசா, டிறிபேக்-ராமகிருஷ்ணலால், யா இ க. உயரம் பாய்தல் பிரேமச்சந்திரன், ஸ்கந்தா- சாந்திகுமார், டிறிபேக்-சிவகேசன் மகாஜனு. 100 மீட்டர் சிவனருள்சுந்தரம், சிதம்பரா-திலகநாதன், நடேஸ்வரா- சிவலிங்கேஸ்வரன், மா இ க, 100 மீட்டர் தடையோட்டம் திருஞானசம்பந்தமூர்த்தி, யா இ க-பாலேந்திரன், யா ம க- கந்தாலிங்கம், மகாஜனு. 4X100 மீட்டர் அஞ்சலோட்டம் யாழ் இந்துகல்லூரி, யாழ். மத்தியகல்லூரி, மகாஜனுக்கல்லூரி.

### சம்பியன்கள்

கீழ்ப்பிரிவு: சம்பியன் சிவனருள்சுந்தரம். சிதம்பர. மேற்பிரிவு: சம்பியன் சற்குணசீலன், நடேஸ்வரா. சிறீகாந்தன், உ இ க-இளஞ்சேன, மகாஜனு- செல்வலிங்கம், யா ம க,

### அஞ்சல் கிண்ணம்

அஞ்சலோட்டம் பரிசுக் கிண்ணத்தை யாழ் மத்தியகல்லூரி 45 புள்ளிகளைப் பெற்று சுவீகரித்துவிட்டது.

### புள்ளிகள் விபரம்

யாழ் மத்தியகல்லூரி 191 1/2 மகாஜனுக்கல்லூரி 143 யாழ். இந்துக்கல்லூரி, 118 மானிப்பாய் இந்துக்கல்லூரி 68 கனகரத்தினம் ம ம வித்தியாலயம் 47.

யாழ். மத்தியகல்லூரி 191-1/2 புள்ளிகளைப் பெற்று யூனெல் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

இப்போட்டிகளில் கலந்து கொண்ட கல்லூரிகள்:

அருணோதயாக் கல்லூரி (அ க), அளவெட்டி இந்துக்கல்லூரி அ இ க). சாவகச்சேரி இந்துக்கல்லூரி (சா இ க) சிதம்பராக் கல்லூரி (சி. க) டிறிபேக் கல்லூரி (டிறிபேக்) யாழ் மத்தியகல்லூரி(யா ம க) யாழ்இந்துக்கல்லூரி(யா இ க) கனகரத்தினம் ம ம வி (க ம ம வி) கொக்குவில் இந்துக்கல்லூரி (கொ இ க) மகாஜனக் கல்லூரி (மகாஜன) மனிப்பாய் இந்துக்கல்லூரி (மா இ க) யூனியன் கல்லூரி

(6-ம் பக்கம் பார்க்க)


### விற்பனைக்கு

நாவற்குழி - யாழ்ப்பாணம் றெயில் ஸ்தானத்திற்கும், கைதடி ஞ்சியசாலைக்குமிடையே கண்டி வீதியில், அங்கீகரிக்கப்பட்ட வீட்டுத்திட்டத்திற்குக் கிட்டியதாய் அரை ஏக்கர் காணி உள்ளது தென்னை, பனை, கிணறு, சிறு ஓட்டுவீடும் உண்டு. யாழ்ப்பாணம் 1-ம் குறுக்குத்தெரு 10-ம் இல்லத்தில் இருக்கும் பிரக்கிராசியார் இராசதுரைக்கு விண்ணப்பிக்கவும். 741



## வரி விளம்பரம்

### கல்வி

ஜி. சி. இ. (சாதாரணம்) வகுப்புகளில் சில இடங்கள் காலியாக உள்ளது; தாமதிக்காமல் சேருங்கள். யுனைடெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107 பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 725

இலண்டன் சேம்பர் ஓவ் கொம்மர்ஸ், இன்ஸ்ரிரியூற் ஓவ் புக்கீப்பர்ஸ், போஸ்மாஸ்டர்ஸ் அன் சிக்னலர்ஸ், குருவித்தியாலய பிரவேசம், அப்போதிக்கரி, ஸ்ரேசன்மாஸ்டர் பரீட்சைகளுக்குரிய வகுப்புகளுக்கு தற்பொழுது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 785

ஆங்கிலம் / தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தக வகுப்புகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தங்க இடவசதி உண்டு யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 786

சில நாட்களுக்குள் பி. ஏ. வகுப்புகள் ஆரம்பமாகும். தாமதிக்காமல் பதிவு செய்துகொள்ளுங்கள், யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 787

ஜி. சி. இ. உயர்தரம் கலை / விஞ்ஞானம் வகுப்புகளுக்குரிய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி, கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 781

சிறந்த ஆதரமுடைய ஆசிரியரால் பாலர் கீழ்ப்பிரிவு தொடக்கம் எஸ். எஸ். சி. வரை சிங்கள வகுப்புகள் நடத்தப்படுகின்றது. யுனைட்டெட் இன்ஸ்ரிரியூற்ஸ், நெல்லியடி. கரவெட்டி / 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 747

### வாடகைக்கு

யாழ்ப்பாணம் கே. கே. எஸ். றோட்டிலிருக்கும் 149-ம் இலக்க கட்டிடத்தில் மேல்மாடி வாடகைக்குக் கொடுக்கப்படும் நேரில் தொடர்புகொள்ளவும்:- த. சங்கரப்பிள்ளை பிறதர்ஸ், 149, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 746

### தேவை

ஸ்ரோர் கீப்பர் (Store Keeper) ஒருவர் உடனே தேவை. நம்பிக்கையும் நற்சான்றுமுள்ளவராக இருத்தல் வேண்டும். பிணைப்பணம் ரூபா 3000/- ரொக்கம் செலுத்தக் கூடியவருக்கு மாதச்சம்பளம் ரூபா 175/- கொடுக்கப்படும். 12-8-65 க்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 756, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 756

சிறு தொழில் செய்வதற்கு பெண்களும் ஒரு பெண் குமாஸ்தாவும் வான் விற்பனையாளர் ஒருவரும் தேவை. 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். கங்கா கெமிக்கல் இன்டஸ்றீஸ், கண்டி வீதி, கைதடி. நுணாவில். சாவகச்சேரி. 755

### விற்பனைக்கு

கண்டிக்குளியில் வீடும் வளவும் விற்பனைக்கு இருக்கிறது. கச்சேரி பள்ளிக்கூடங்களுக்கு அருகாமையில். விபரங்கட்கு T. S S. மணியம், C/o K. சிவானந்தன், 39, கண்டிரூட், கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 759


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நடுஜாமத்தில் நடந்த "நாடகம்"

## படம்பார்த்த இளம்பெண்ணுக்கு பிஸ்கால் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், திங்கள் உல்லாசமாக மூன்று மணி நேரம் திரைப்படம் பார்த்துவிட்டு தியேட்டரிலிருந்து ஒருவித வெறுப்புடன் வெளியே வந்த இருபெண்கள் கோஷ்டியிடையே ஏற்பட்ட பேச்சுக்கள் சச்சரவாகி, கடைசியில் பொலிஸ் ஸ்டேஷனில் போய் முடிந்திருக்கிறது. இதன் பலன்: ஒரு இளம் பெண் இம்மாதம் 16-ந் திகதி வரை பிஸ்கால் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டாவது காட்சி திரைப்படம் பார்த்துவிட்டு படமாளிகையை விட்டு வெளியே வந்த இரு பெண்கள் கோஷ்டியிடையே ஏற்பட்ட ஒரு சிறு சம்பவம், சச்சரவாகி பின்னர் "கைகலப்பு" ஏற்படவிருந்த சமயத்தில் ஒரு குழந்தையின் தங்கச்சங்கிலி களவு போய்விட்டதென்றும் இதனைத் தொடர்ந்து சந்தேகத்தின்மீது ஒரு இளம் பெண் இப்பொழுது பிஸ்கால் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார் என்றும் அறியப்படுகிறது.

இச்சம்பவம் நேற்றுமுன் தினமிரவு நடுஜாமத்தில் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள தியேட்டர் முன் நிகழ்ந்ததாம்.

இளம் பெண்கள்சிலர் இரண்டாவது காட்சி திரைப்படம் பார்த்துவிட்டு வெளியே வந்த பொழுது வேறு இரு பெண்களைச் சந்திக்க நேரிட்டனராம். அப்பொழுது ஒரு கோஷ்டியிலுள்ள ஒரு குழந்தையின் உடல் அங்குநின்ற மற்றக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு பெண்மீது உராசிவிட்டதைத் தொடர்ந்து இரு பெண்கள் கோஷ்டிக்குமிடையே சச்சரவு ஆரம்பமானதாம்.

பேச்சுக்கள் முற்றி காரசாரமாகிக்கொண்டு போனபொழுது இரு பெண்கள் உள்ள கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர் மற்றக்கோஷ்டியிலிருந்த ஒரு குழந்தையின் தங்கச் சங்கிலியை இழுத்தாராம். அச்சமயத்தில் பரிமளா தேவி (3 வயது) என்ற அக்குழந்தை அழத் தொடங்கவே 'தகுட்டுப்பெண்ணையும் களவுமாக பிடிபட்டுவிட்டாராம். இச்சம்பவம் குறித்து பொலிஸாருக்கு உடன் அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியான இன்ஸ்பெக்டர் திரு எம் சவுந்தரநாயகம் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு உடனடியாகச் சென்று விசாரணைகள் நடத்திய பின்னர் சந்தேகப் பெண்ணை கைது செய்தார்.

சந்தேகப் பெண் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு ராஜரத்தினம் முன் நேற்றுக் காலை ஆஜர் செய்யப்பட்டார் இம்மாதம் 16-ந் திகதி வரை அப் பெண்ணை பிஸ்கால் றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டுள்ளார்.


சகல விதமான

கைத்தறி

சேலைகளுக்கு

S. R. S.

ஜவுளி மாளிகை

216, கே. கே. எஸ். ரோட்,

யாழ்ப்பாணம்.

போன்: 296


## இலங்கையின்...

(1-ம் பக்க தொடர்ச்சி)

### மந்திரிப்பதவி ஏற்பார்



"இலங்கையின் பிரதிநிதியாக ஐ. நா. சபைக்குச் செல்லுபவர் சாதாரண ஒரு எம். பி. யாக இருக்கக்கூடாதென்ற காரணத்தினால் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் விரைவில் மந்திரியாக விசுவாசப் பிரமாணம் செய்யவிருக்கிறார்" என்று கூறினார்.

உடுப்பிட்டி எம் பி திரு எம சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:-



உலகத்துக்கு தேவையானது 'ஜனநாயகமா, சர்வாதிகாரமா?' என்ற கேள்விக்குப் பதிலளிப்பதற்காகவே எங்கள் தலைவர் திரு ஜி ஜி ஐ நா சபைக்குச் செல்கிறார் இதனைக் கண்டு எரிச்சலும் பொறாமையும் கொண்ட ஒரு சாரார் 'யாழ்ப்பாணத்தில் இடைத் தேர்தலா?' என்றும் பொன்னம்பலம் இனி அமெரிக்காவிலேயே தங்கிவிடுவாரென்றும் பொய்ப்பிரசாரம் செய்து வருகிறார்கள். எல்லாரும் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் ஏனோ இவர்கள் மட்டும் பொறாமையும் எரிச்சலும் கொள்கிறார்கள் தெரியவில்லை!

ஐ நா சபைக்குச் செல்லும் திரு ஜி ஜி அங்கு குரல் எழுப்புவதற்காக மட்டும் செல்லவில்லை. அமெரிக்கா, கனடா போன்ற இடங்களில் பொருளாதாரத் துறையில் எம்மாதிரியான புதிய முறைகளைக் கையாள்கிறார்கள் என்பதைக் கவனித்து வடபகுதியிலும் அங்குள்ளது போன்று புதுமுறைகளில் பொருளாதாரத்துறையில் அபிவிருத்தி செய்வதற்காகவுமே அங்கு செல்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டமேசை மகாநாட்டின் மூலம்தான் ஒரு நாட்டின் பிரச்னையைச் சுலபமாகத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற கருத்தை அரசியல் ஞானியான ராஜாஜியே ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகையால் வட்டமேசை மகாநாடுதான் தமிழ் மக்களின் இழந்த உரிமைகளைப்பெற சிறந்த வழி என்பதை மீண்டும் வற்புறுத்த விரும்புகிறேன்."

யாழ். மாநகரசபை அங்கத்தவர் காதி- எம் எம் சுல்தான் பேசுகையில் மாவட்ட சபைகள இலங்கையில் நிறுவப்பட்டால் தமிழ்ச் சமுதாய முழுவதும் அடிச்சுவடே தெரியாமல் அழிந்துபோய்விடுமென்று சொன்னார்.

திருவாளர்கள ஸ்ரீதரன், சண்முகராசா, குமரன், உட்பட வேறுபலரும் பேசினர்.

## "ஜிப்'பில ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தரிட்சத்தில் வந்து நின்ற ஒரு ஜீப்பில் அவர் இருந்தார். அங்கு நான் சென்ற ஜீப்தான் முதலில் சென்றது. 2, 3 நிமிடங்களின் பின்னர்தான் அவரது ஜீப் வந்தது. அவரின் ஜீப்பில வேறு யாராவது வந்தனரா என்று நினைவில்லை அவர் அதைச் செலுத்தியதைக் காணவில்லை யார் செலுத்தினார் என்று தெரியாது என்னோடு ஜீப்பில் வந்தவர்களின் பெயர் தெரியாது அவர்கள் இராணுவ யூனிபோமில் இருந்தமையால் இராணுவத்தினர் என்று நினைத்தேன் அவர்களுடன் மீண்டும் முகாமிற்குத் திரும்பிப் போனேன் ஆனால் அதே வாகனத்தில் அல்ல

### கதைத்தது நினைவில்லை

என்னோடு ஜீப்பில் வந்தவர்களுடன் கதைத்திருப்பேன் ஆனால் நினைவில்லை நாங்கள் அன்று விசேஷ கடமையில் சென்றோம்

காப்டன் இலங்கதிலகாவையும், லெப்டினன்ட் கேர்னல் ஆர் ரி சில்வாவையும் தெரியும் 5-7-64 அன்று நடைபெற்ற சில சம்பவங்கள் சம்பந்தமாக இவர்கள் இயக்கச்சி இராணுவ முகாமிற்கு வந்து விசாரணை நடத்தினார்கள் அவர்கள என்னையும் கேள்வி கேட்டு விசாரித்தனர் எனது பதில்கள எழுதப்பட்டனவா என்று எனக்கு ஞாபகமில்லை கேள்வி கேட்டது காப்டன் இலங்கதிலகாவா நினைவில்லை அவரும் கேள்வி கேட்டிருக்கலாம் பல அதிகாரிகள கேள்வி கேட்டனர்

### தெரியாது

அன்று நடந்த விசாரணைகள் கொழும்பு தலைமை அலுவலகத்தினரால நடாத்தப்பட்டது என்று தெரியாது. அவர் என்னைக் கேட்ட கேள்விகள் என்னவென்று தெரியாது முதலாம் எதிரியைத் தவிர மற்றவர்களை யாரென்று தெரியாது எல்லோரையும் சந்திக்கிறேன் ஆனால் யாரென்று தெரியாது இராணுவவீரர்கள என்றபடியாக தெரியும் முன்னர் அவர்களை இராணுவ உடையில் சந்தித்திருக்கிறேன் 7-7-64-ந் திகதி நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் 2-ம் எதிரியும் நின்றாரா என்று தெரியாது அன்றைய தினம் 5-ம் திகதி என்னுடன் காவல் நிலையத்திற்கு வந்தவர்களைக் கண்டு பிடிக்க நினைக்கவில்லை அவர்களை இன்றுவரை சந்திக்கவில்லை காவல் நிலையத்திற்குச் சென்று திரும்பியது பற்றி நான் எந்தவிதக் குறிப்பும் எழுதவில்லை முதலாம் எதிரி எனனிடம் விசேஷ ரோந்து புரியத் தயாராகுமாறும், 10 12 பேர் தேவை என்றும் கூறினார் நான் தான் அவர்களுக்குப் பொறுப்பாயிருந்தேன்

### அடையாளம் தெரியாது

என்னோடு ஜீப்பில் வந்தவர்கள் தாளையடி காவல் நிலையத்தில் இறங்கி உள்ளேபோனார்கள் அப்போதும் அவர்களை அடையாளம்காணவில்லை அவர்கள் திரும்பி வந்தவுடன் ஜீப்பில் ஏறும்படி கூறினேன் ஆனால் வந்தவர்கள் தான் ஏறினார்களா தெரியாது

கொழும்பிலிருந்து ராணுவ முகாமிற்கு வந்து விசாரணை நடாத்திய உயர்தர ராணுவ அதிகாரிகள் என்னோடு ஜீப்பில் வந்தவர்கள பற்றி விசாரித்தனரா என்று தெரியாது அவர்கள என்னோடு சிநேக பூர்வமான பேச்சுவார்த்தை நடாத்தினர் என்கையெழுத்தைஅவர்கள வாங்கினார்களா என்று தெரியாது

இக்கட்டத்தில் நீதிமன்றம் இம்மாதம் 17-ம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது அன்றைய தினம் சார்ஜண்ட் ஜினதாஸ தொடர்ந்து சாட்சியமளிப்பார் இவர் முடிக்குரிய தரப்பில் அழைக்கப்பட்ட பிரபல முக்கியமான சாட்சி என்பது குறிப்பிடத்தக்கது.

முடிக்குரிய தரப்பில் அட்டோர்னி ஜெனரலுக்காக வழக்கறிஞர் திரு ரஞ்சித் அபயசூரியாவும், எதிரிகள சார்பில் திரு சி பாலகிருஷ்ணனின் உதவியுடன் வழக்கறிஞர் திரு கே வ் எஸ் சண்முகநாதனும் ஆஜரானர்கள

## புதிய முறை

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, ஞாயிறு கள்தோறுக்குச் செல்லும் நேரத்தையும் வேலையை விட்டுப் போகும் நேரத்தையும் தின இடாப்பில் தபால் விநியோகிக்கும் ஊழியர்கள் தாமாகவே பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று தபால் மந்திரி திரு. ஜெயவிக்ரமா தற்பொழுது உத்தரவிட்டுள்ளார். இந்தப் புதியமுறை நாளையிலிருந்து செயல்படுத்தப்படலாம் என நம்பப்படுகிறது. இதுவரை காலமும் தின இடாப்பின் பெயர்கள் வேறு ஒரு உத்தியோகத்தராலேயே பதிவுசெய்யப்பட்டு வந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## கல்லூரிகளின்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

(யூ ச) உரும்பராய் இந்துக் கல்லூரி (உ இ க) வைத்தீஸ்வராக் கல்லூரி (வை வி) விக்னேஸ்வராக கல்லூரி (வி ச) நடேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி, லைக்தர், உடுப்பிட்டி.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 9-8-65

### கொழும்பு

(செய்திகள் காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவசிந்தனை, 6-55 கிறிஸ்தவசிந்தனை, 7-00 கதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 5-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 பாட்டு — ஏ. வேலாயுத பிள்ளை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 மிழ் முலம் சிங்களம், 9-45 நேயர்விருப்பம், 10-15 எங்கள் விருப்பம்.


## 17 கிளர்ச்சிக்காரர் மாண்டனர்

கார்ட்டூம், ஆக தெற்கு சூடானில் நேற்று அரசாங்க துருப்புக்களுக்கும் கிளர்ச்சிக்காரர்களுக்குமிடையே நடைபெற்றசண்டையில் 17 கிளர்ச்சிக்காரர்கள் பலியானார்கள்


ஒரு பிரபலமான டுப்பிளிகேட்டறின் பிரபலமான மொடல் சகாயமானவிலைக்கு உண்டு

REX-ROTARY

M2



எம்2 — விசேஷ அம்சங்கள்

காகிதங்கள் வைக்கும் பெட்டியில் 250 காகிதங்கள் வைக்கலாம். தபால் அட்டையிலிருந்து முழு அளவுக் காகிதம் வரையான எந்த அளவுள்ள காகிதத்திலும் பிரதிகள் எடுக்கலாம்.

உயரம், ஓரம் ஆகிய நிர்ணயங்களை இலகுவில் செய்யலாம். விரும்பிய விதத்தில் ஒழுங்கு செய்யக்கூடியது. ஸ்டென்சில் வெட்டுகள் செய்யக் கூடிய வகையில் சரி செய்யலாம்.

கௌண்டரில் நான்கு இலக்கங்கள் உண்டு. விரும்பினால், ஒற்றைக் கணக்கை மாற்றி சைபர் ஆக்கக்கூடிய வசதியும் செய்யப்பட்டுள்ளது. இது எடுக்கும் பிரதிகளின் எண்ணிக்கையைச் சரியாகக்கணக்கிடுகிறது. இயந்திரம் இயங்காதிருக்கும்போது கிராங்கின் சுழற்சிமுறை மாற்றுப் பொறி சுழற்சி எண்ணிக்கைகளை இது கணக்கிடுவதில்லை.

இத்தனை சிறப்பு வாய்ந்த அம்சங்களுடன் கூடிய எம்—2 இன் விலை குறைவானதே. பாவிக்கும்போதும் அதிக செலவு ஏற்படுவதில்லை. இதனால்தான் எம்—2 இன் விலைக்கு அது விரைவில் நல்ல சேவைபுரிகிறது.

எம்—2 மாற்றிய இன்னும் அதிகம் கூறலாம். உங்களுக்குக் கஷ்டமின்றி எவ்வளவுதாம் அது சேவை செய்யும என்பதை நீங்கள் அறிய வேண்டும். தொலைபேசி மூலம் அல்லது கடிதம் மூலம் எம்முடன் தொடர்புகொண்டால், எம்—2 வேலை செய்யும் விதத்தை உங்களுக்கு உங்கள் காரியாலயத்திலேயே காண்பிப்பதில் மகிழ்ச்சியடைவோம்.

விரைவில் இறக்குமதி செய்யப்படவிருக்கிறது.

ஆபீஸ் இக்கியுப்மெண்ட் லிமிட்டெட்

(OFFICE EQUIPMENT LTD.)

ஐலண்ட் கட்டிடம், கொழும்பு—3.

தொலைபேசி: 6168

தந்தி: ஆபீஸ் எயிட்ஸ்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org